# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஹாலந்திலுள்ள நன்ஸ்ஃபீட்டிலிருந்து
## 14.10.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நாம் வாழ்கின்ற இந்தக் காலம் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலமாக இருக்கின்றது. இது எப்படிப்பட்ட காலம் என்றால் இதில் மற்ற அனைத்து மார்க்கங்களின் மீதும் இஸ்லாத்திற்குள்ள மேன்மை நிரூபிக்கப்படும். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளாகிய நாம் எல்லா மார்க்கங்களின் மீதும் இஸ்லாத்தின் சிறப்பை இறைவன் நிரூபித்துக் காட்டுகின்றான் என்ற உறுதியில் நிலைத்திருக்கின்றோம். குறிப்பாக கிறித்தவர்கள் இறை அடியாரை இறைவனாக ஆக்குகின்ற கொள்கைக்கு எதிராக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கியுள்ள ஆதாரங்கள், தெளிவுகள், இறைவன் நமக்கு ஆதரவாக வெளிப்படுத்தியுள்ள விண்ணின் உதவிகள் ஆகியவற்றுடன் அஹ்மதிய்யா ஜமாஅத் நிற்கின்றது. அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் இதனை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான்.

எந்தவொரு முஸ்லிம் பிரிவினரும் இந்த எதிரிகளுக்கு எதிராக இதில் கோடியில் ஒரு பகுதியைக் கூட காட்ட முடியவில்லை. ஏனென்றால், இந்தப் பணிகளைக் கூட அல்லாஹ் மஹ்தியிடமிருந்தும், மஸீஹிடமிருந்தும், அவனுடைய ஜமாஅத்திடமிருந்தும் பெற வேண்டியது இருந்தது. அல்லாஹ் அந்தப் பணிகளை வாங்கியுள்ளான். கிறித்தவ உலகமும் இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. அவ்வாறே நல்லியல்புள்ள முஸ்லிம்கள் இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதாவது நேர்வழிக்கான வழி அஹ்மதிய்யத்தில் தான் இருக்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் நேர்வழியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து தோன்றியவர்கள் என்பதில் அந்த நல்லியல்பு கொண்ட மக்களுக்கு உறுதி இருக்கின்றது.

இன்றிலிருந்து 60 அல்லது 70 வருடங்களுக்கு முன்னால் ஆப்பிரிக்காவில் கிறித்தவ பாதிரிகள் விரைவில் முழு ஆப்பிரிக்காவும் கிறித்தவத்தின் மடியில் வந்து விழுந்து விடும். மேலும் அங்குள்ள மக்கள் தேவ குமாரனின் இறைத்தன்மையை ஏற்றுக் கொள்வார்கள் என்று முழங்கினார்கள். இன்றிலிருந்து 120 அல்லது 130 வருடங்களுக்கு முன்னர் கிறித்தவ மிஷனரிகள் இந்தியா தொடர்பாகவும் இந்தியாவில் கிறித்தவம் விரைவில் வெற்றியைத் தழுவும் என்றும் கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறை அடியாரை இறைவனாக ஆக்குகின்ற கருத்தை தனது நூல் மூலமாகவும் அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் மூலமாகவும் பொய் என்று நிரூபித்தபோது கிறித்தவத்தின் மடியில் விழ இருந்த இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் அல்லது கிறிஸ்தவத்தை இஸ்லாத்தை விட சிறப்பானதாக கருதிய முஸ்லிம்கள் அல்லாஹ்வின் அருளால் விழித்தெழுந்து உணர்வு பெற்றவர்களாக ஆனார்கள். இந்த பொய்யான கருத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்தும் அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள். ஒரு மிகப்பெரிய தடைச் சுவரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிற்கும்படி செய்து ஏக இறைவனின் ஏகத்துவம், இஸ்லாத்தின் உண்மை, மேன்மை ஆகியவற்றை உலகில் நிரூபித்துக் காட்டினார்கள். இவ்வாறே ஆப்பிரிக்காவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முபல்லிக்குகள் இஸ்லாத்தை தப்லீக் செய்து திரித்துவத்தின் தவறான கொள்கைகளின் உண்மை நிலையை எடுத்துக் கூறி கிறிஸ்தவ பிரச்சாரகர்களின் முன்னிலையில் ஒரு தடையை ஏற்படுத்தினார்கள். இதை கிறிஸ்தவ பிரச்சாரகர்கள் வெளிப்படையாக ஏற்றுக் கொண்டுள்ளனர். அஹ்மதிகள் எங்களுக்கு முன்னால் தடைகளை ஏற்படுத்துகின்றனர் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் இஸ்லாத்தின் இந்த அல்லாஹ்வின் பயில்வான் – இறைவனால் அனுப்பப்பட்ட மகானின் பணிகளைப் பார்த்த பிறகும் கூட முஸ்லிம்களில் பெரும்பாலார் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பதற்குப் பதிலாக, அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்குப் பதிலாக அவர்களுக்கு எதிராக காழ்ப்புணர்ச்சி, பகைமை,

வெறுப்பு ஆகியவற்றைக் காட்டுகின்றனர். அதில் எந்த அளவு முன்னேறி உள்ளனர் என்றால் அல்லாஹ்தான் இவர்களின் தீங்கிலிருந்து நம்மை பாதுகாக்க வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வின் விதி அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவருக்கு துணை நிற்கும் அவருக்கு துணையாக அது நிற்கின்றது. நல்லியல்பு கொண்ட மக்கள் மெதுமெதுவாக முஹம்மதிய மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்து வந்தனர். இணைந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் பெரும்பாலார் பெயர் தாங்கிய முல்லாக்களுக்கு அஞ்சியவாறு குறைவான அறிவுடையவர்களாக அவர்கள் இருப்பதன் காரணமாக எதிர்ப்பதில் தீவிரமாக உள்ளனர். ஒவ்வொரு நாளும் அஹ்மதிகளுக்கு எதிராக ஏதாவதொரு வகையில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முஸ்லிம்கள் என்று தம்மை கூறிக் கொள்பவர்களின் நாடுகளிலும் குறிப்பாக பாகிஸ்தானிலும் இருந்து வருகிறது. சில டி.வி சேனல்கள் இதில் முன்னணியில் நிற்கின்றன. அவை ஐரோப்பாவிலும் உலகம் முழுவதும் ஒளிபரப்பப்படுகிறது. குறைவான அறிவுடைய முஸ்லிம்களின் உணர்வுகளை தவறான கருத்துக்களின் மூலம் தூண்டுவதுடன் அஹ்மதிய்யத்திற்கு எதிராக அவர்களை செயல்பட வைக்கின்றது. சில டி.வி. சேனல்கள் தங்களது பாலிஸிக்கு ஏற்றவாறு இதற்கு அனுமதி வழங்குவதில்லை. தற்காப்புப் பணி என்ற பெயரில் தீவிரவாதத்தை தூண்டுபவர்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றவர்கள் இப்படிப்பட்ட டி.வி சேனல்களில் கூட நேரத்தைப் பெற்று சில அறிவிப்புகளைச் செய்கின்றார்கள். அதாவது அஹ்மதிகள் கொலை செய்யப்பட வேண்டியவர்கள் என்று அவர்கள் அறிவிக்கின்றார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பு இவ்வாறே ஒரு சேனலில் ஐரோப்பாவின் ஒரு மவ்லவி இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பை செய்தார். ஆனால் சேனலில் எஜமானரிடம் நாம் தொடர்பு கொண்ட போது அவர் இதற்காக மன்னிப்பு கேட்டார். இனி இந்த மவ்லவியை தனது சேனலில் வரவிடமாட்டோம் என்ற உறுதியையும் அவர் நமக்கு வழங்கியுள்ளார். ஆனால், இந்த தீய இயல்பைக் கொண்டவர்கள் இஸ்லாம், ரஸூல் (ஸல்) அவர்களின் கண்ணியம், கத்மே நுபுவ்வத் ஆகியவற்றின் பெயரால் குறைவான அறிவுடைய முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டுவதற்குரிய பணிகளை செய்து வருகின்றார்கள். இஸ்லாத்தின் தப்லீக் மற்றும் இஸ்லாத்தின் மேன்மையை நிரூபிப்பது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதி ஆகியவற்றை உலகிற்கு தெளிவுபடுத்திக் காட்டுவதற்காக எத்தகைய முயற்சிகளை அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வருகிறதோ அதைப் பற்றி இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளும் பிரச்சாரகர்களும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். தம்மை முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்பவர்களுக்கும், அஹ்மதிய்யத்திற்கு எதிராக ஆட்சேபனை செய்பவர்களுக்கும் இஸ்லாத்தை தப்லீக் செய்வதற்கு சில ரூபாய்களை செலவு செய்வதற்குரிய நல்வாய்ப்பு கூட கிடைக்கவில்லை. ஆனால் நாட்டின் செல்வத்தை கொள்ளை அடிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் கவலை இருக்கின்றது.

இன்று இஸ்லாம் மற்றும் தூதரின் கண்ணியத்தின் பெயரில் என்னவெல்லாம் நாட்டில் நடக்கின்றதோ, எத்தகைய தீவிரவாதம் நாட்டில் பரவியுள்ளதோ அது ஒவ்வொரு நல்லியல்பு கொண்ட மனிதனையும் அமைதியை இழக்கும்படி செய்துள்ளது. எந்த பாதுகாப்பும் இல்லாத நிலை உள்ளது. அஹ்மதிகளுக்கு எதிராக இந்த தீவிரவாத போக்கு இருந்து வருகிறது. இதை சகித்துக் கொள்ளும் பழக்கம் அஹ்மதிகளுக்கு இருக்கின்றது. இதுபற்றி நான் பலமுறை கூறியிருக்கின்றேன்.

ஆனால், பாகிஸ்தானில் வாழ்கின்ற எந்தவொரு குடிமகனும் இதிலிருந்தும் பாதுகாப்பாக இல்லை. ஆனால் இது பற்றி அவர்கள் சிந்தனை செய்வதில்லை.

ஒருபுறம் சட்டம் செயல்படாத நிலை இருந்து வருகிறது. நாட்டில் குழப்பம் பரவியுள்ளது. எந்தவொரு அரசாங்கமும் அங்கு இல்லை. மறுபுறம் அல்லாஹ்வின் தண்டனைகள் நாட்டை சூழ்ந்துள்ளன. இது எல்லாம் என்ன நடக்கின்றது? சமுதாயம் எங்கு சென்று கொண்டிருக்கிறது? அல்லாஹ் எந்த முடிவின் பக்கம் இவர்களை கொண்டு செல்கின்றான்? இவர்களுக்கு என்ன முடிவு ஏற்படும்? இதுபற்றி சிந்தித்துப் புரிவதற்கான அறிவை அல்லாஹ்வே இவர்களுக்கு வழங்குவானாக.

அஹ்மதிகளைப் பொறுத்தவரை அவர்கள் நாட்டின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்பவர்களாக இருப்பதால் சட்டரீதியாக அவர்கள் மீது சில அடக்குமுறைகள், துன்பங்கள் தரப்பட்ட பிறகும் கூட, அவர்கள்

மீது கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகும் கூட அல்லாஹ் நாட்டை எல்லா விதமான அழிவுகளிலிருந்தும் காப்பாற்றுவானாக என்று அவர்கள் துஆ செய்கின்றார்கள். கடந்த குத்பாவில் நான் துஆவிற்காக கூறிய சமயத்தில் நோன்பு வைக்கும்படியும் கூறியிருந்தேன். ஒவ்வொரு வாரமும் ஒரு நஃபிலான நோன்பு நோற்க வேண்டும் என்று கூறியிருந்தேன். இது தொடர்பாக நான் கூறிக் கொள்வது என்னவென்றால் ஜமாஅத் அளவில் ஒரே நாளில் அனைவரும் நோன்பு வைப்பது பொருத்தமானதாக இருக்கும். ஒவ்வொரு உள்ளூர் ஜமாஅத்தும் தாங்கள எந்த நாளில் நோன்பு நோற்பது என்பதை அவர்கள் முடிவு செய்யலாம். ஆனால் உள்ளூர் ஜமாஅத்துகள் ஒரே நாளில் நோன்பு நோற்கலாம். இதையே நான் பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்கு கூறியிருந்தேன். ஜமாஅத் இதன் பக்கம் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். எங்கு ஜமாஅத் இந்த எதிரிகளிடமிருந்தும் அவர்களது பகைமையில் இருந்தும் கொடுமைக்காரர்களிடமிருந்தும் அவர்களது கொடுமைகளில் இருந்தும் துஆக்கள் மூலம் தப்பிக்க வேண்டும் என்று நான் கூறியிருந்தேனோ அத்துடன் இந்த நாடும் இவர்களை விட்டு அகன்று தூய்மையாக வேண்டும். இந்த குழப்பவாதிகளிடம் இருந்தும் அல்லாஹ் இந்த நாட்டை தூய்மையாக்க வேண்டும். அதற்காகவும் துஆ செய்ய வேண்டும். அதன் மூலம் இந்த நாடு தப்பிக்க வேண்டும். நமக்கு நமது நாட்டின் மீது அன்பு இருக்கின்றது. இதனால் நமது உள்ளம் இந்த விஷயங்களைப் பார்த்து நிம்மதியிழந்து விடுகிறது. இது ஒவ்வொரு பாகிஸ்தானிய அஹ்மதியின் கடமையாக இருக்கின்றது. இதை அவர் நிறைவேற்ற வேண்டும். இப்போது நான் முதலில் கூறிய விஷயத்திற்கு திரும்பி வருகின்றேன்.

அதாவது நான் இந்த சமயத்தில் கூறவந்தது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அவர்களிடமிருந்து நேர்வழியைப் பெற்று அவர்களது ஜமாஅத்திலுள்ள நபர்களும்தான் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி எல்லா மார்க்கங்களின் மீது இஸ்லாத்தின் உயர்வை நிரூபிப்பது ஆகிய பணிகளைச் செய்து வருகின்றனர். இதன் காரணமாக ஆப்பிரிக்கா அல்லது அமெரிக்கா அல்லது உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும் இஸ்லாத்தின் தற்காப்பிற்காக எல்லாரையும் விட முதலில் அஹ்மதிகளே சற்றும் தயங்காமல் நிற்கின்றனர். தற்காப்புக்காக மட்டுமல்ல; இஸ்லாத்தின் சிறப்பை நிரூபிப்பதற்காக அவர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

எங்கு பெட்ரோலின் எந்த வளமும் எந்த பணியையும் செய்ய முடியவில்லையோ அங்கு அஹ்மதிகள் இறைவனின் திருப்திக்காக தங்களது சாதாரண வருவாயிலிருந்து கொடுக்கின்ற சந்தாக்கள் வேலை செய்கிறது. இதில் நமக்கு எவ்வித சிறப்பும் பெருமையும் இல்லை. நமது சாதாரண தியாகங்களிலும் பரக்கத்தை வழங்குவது அல்லாஹ் நம் மீது செய்துள்ள அருளாகும். இதற்கு எண்ணற்ற கனிகள் கிடைக்கின்றது. அல்லாஹ்வின் அன்பை ஈர்ப்பதற்கு அவன் முன்னால் நமது சாதாரண தியாகங்களை செய்து கொண்டே செல்வது நமது பணியாகும். நாம் இறையருள்களுக்கு நன்றி செலுத்த மறந்தவர்கள் அல்ல. இது அல்லாஹ் நம் மீது செய்துள்ள எவ்வளவு பெரிய அருளாக இருக்கின்றது? அவன் நமக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான். நமது மூதாதையர்களுக்கு அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்கியிருக்கின்றான் என்றால் நமக்கு அஹ்மதிய்யத்தில் நிலைத்திருக்கின்ற நல்வாய்ப்பை அவன் நமக்கு வழங்கியுள்ளான். அதன் மூலமாக நாம் காலத்தின் இமாமுடன் இணைந்து அவரது பிரச்சாரத்தை நிறைவு செய்வதற்கு முயற்சி செய்தவாறு இவ்வுலக வாழ்க்கையையும் மறுமையையும் சரிசெய்து கொள்ள முடியும்.

ஆனால், நினைவில் கொள்ளுங்கள். பொருள் தியாகங்கள் செய்வதால் மட்டும் நமது பணிகள் முடிவடைந்து விடாது. நாம் நம்மிடத்தில் அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய உள்ளத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது உயர்வான நல்லொழுக்கத்தின் தரத்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியை தத்தமது நாட்டில் பரப்புவதற்காக முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்திற்கு எதிராக கூறப்படும் குற்றச்சாட்டுகளை அகற்றி இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உலகின் முன்னால் எடுத்து வைக்க வேண்டும். ஹாலந்தின் ஜமாஅத் சிறிய ஜமாஅத்தாக இருந்தாலும் அது தனது இந்தப் பொறுப்பை

புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சிலர் பணியாற்றுவதன் மூலம் இந்த நோக்கம் முழுமை பெறாது. ஹாலந்தில் வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் தங்களது சுற்றுச்சூழலில் இந்த முக்கியமான பணிக்காக முயற்சி செய்ய வேண்டும். இந்த ஹாலந்தில் தான் அந்த பாக்கியமற்ற மனிதரும் இருக்கின்றார். இந்த நாட்டில் அந்த பாக்கியமற்ற நபர் இருக்கின்றார். அவர் தனது அரசியல் பொலிவுக்காக இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக அவதூறுகளைக் கூறுவதில் முன்னேறி வருகின்றார். பகைமையிலும், எதிர்ப்பிலும் முன்னேறி வருகின்றார்.

அவர் எந்த அளவு காழ்ப்புணர்ச்சியிலும் பகைமையிலும் முன்னேறியுள்ளார் என்றால் இஸ்லாம் என்ற பெயரை கேட்டாலேயே கோபத்தால் அவரது வாயில் நுரை வர ஆரம்பித்து விடுகின்றது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு முஸ்லிம் அமைப்பு தீவிரவாத செயல்களை கடுமையாக கண்டித்த சமயத்தில் கீர்ட் வில்டர்ஸ் என்ற பெயரை உடைய இந்த அநியாயக்காரர் இஸ்லாம் மதமே தீவிரவாதத்தை விரும்புகின்ற போதனைகளைத்தான் தந்துள்ளது. இது பொய்யான மார்க்கமாகும். இறைவன் புறமிருந்து வந்துள்ள மார்க்கமல்ல. இதை உலகிலிருந்து அழித்துவிட வேண்டும் என்று நீங்கள் கூறாத வரை நாங்கள் நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று கூறியுள்ளார். இதுதான் இவரது எண்ணமாகும். இப்படிப்பட்ட அறிவிப்பை செய்யாதவரை நாங்கள் எந்தவித மன்னிப்புக் கோருவதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று இவர் கூறுகிறார். நாம் இவருக்கு இந்த தூதுச் செய்தியை வழங்க வேண்டும்.

அநியாயக்காரரே! இதை கேளுங்கள். நீங்களும் உங்களது கட்சியும் உங்களுடனுள்ள ஒவ்வொரு நபரும் அழிந்து விடுவர். ஆனால் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கியாமத் வரை நிலைத்திருப்பதற்காக வந்துள்ளனர். நிலைத்திருப்பர். உலகின் எந்த சக்தியும் அது எவ்வளவு பெரிய ஃபிர்அவ்னாக இருந்தாலும் இஸ்லாமிய எதிர்ப்பு சக்தியாக இருந்தாலும் இஸ்லாத்தை அழிக்க முடியாது.

அல்லாஹ் இந்தக் காலத்தில் அந்த அல்லாஹ்வின் பயில்வானை அனுப்பியுள்ளான். அவர் உங்களைப் போன்ற எதிரிகளை அவர்கள் கடுமையாக எதிர்த்த பிறகும் கூட அவர்தான் இஸ்லாத்தை அல்லாஹ்வின் உதவியுடன் உலகில் வெற்றி பெறும்படி செய்வார். அல்லாஹ்வின் இந்த பயில்வானிடம் பைஅத் செய்துள்ள ஒவ்வொரு அஹ்மதியும் நாங்கள் எங்களது உயிர், பொருள், நேரம் ஆகியவற்றை தியாகம் செய்து இந்த நோக்கத்தை நிச்சயமாக பெற்றே தீருவோம் இன்ஷா அல்லாஹ் என்று உடன்படிக்கை செய்துள்ளார். இதைப் பற்றிய அறிவு அவருக்கு இருக்கின்றது. இந்த நாட்டில் வசிக்கின்ற நீங்களும் உலகில் வசிக்கின்ற ஒவ்வொரு அஹ்மதியும் இந்த தூதுச் செய்தியை உலகத்திற்கு வழங்க வேண்டும். இங்கு வசிக்கின்ற ஒவ்வொரு நபருக்கும் இந்த தூதுச் செய்தியை நீங்கள் எட்ட வைக்க வேண்டும். இந்த அரசியல்வாதி, இஸ்லாத்தின் இந்த மிகத் தீய எதிரி, அரசாங்கத்தில் அதிகமான இடங்களில் வெற்றி பெறலாம். ஆனால் உலகத்திற்கு நீங்கள் இதை கூறி விடுங்கள். இவரது இந்த செயல்கள் இறைவனது கைகளால் இவரது அழிவிற்கான வழியை ஏற்படுத்தி விடும் என்பதை நீங்கள் உலகிற்கு கூறி விடுங்கள்.

அல்லாஹ் எப்போதும் தனது தூதரை மிகைத்து நிற்கும்படி செய்வான். அவரது கண்ணியத்தை அவன் பாதுகாக்கின்றான். இன்னும் பாதுகாப்பான் இன்ஷா அல்லாஹ்.

நமக்கு எந்த ஆற்றலும் இல்லை. நாம் எந்த உலக ஆயுதத்தையும் பயன்படுத்த மாட்டோம். ஆனால், எவர்களது உள்ளங்கள் காயப்படுத்தப்படுகின்றதோ அவர்களது துஆக்கள் அல்லாஹ்வின் அர்ஷை உலுக்கி விடுகின்றது. இங்கு அல்லாஹ்வின் நேசரைப் பற்றிய விஷயமாக இது இருக்கின்றது. இங்கு நமது துஆக்களையும் கடந்து அல்லாஹ்வின் தன்மான உணர்வு தானாகவே தனது உணர்வை வெளிப்படுத்தும். அப்படிப்பட்ட கீழ்த்தரமான மக்களின் மண்ணின் துகள்கள்கூட கண்ணுக்குத் தெரியாமல் ஆகி விடும். ஹாலந்தில் நல்ல தூய எண்ணங்களைக் கொண்ட பல மக்களும் இருக்கின்றார்கள். இவரைப் போன்று தான் எல்லாரும் இருப்பார்கள் என்று கூறி விட முடியாது. அந்த நன்மக்கள் இந்த பாக்கியம் கெட்டவர் கூறும் விஷயங்களை மறுக்கின்றனர். அதனால்தான் இவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதிலும் அரசியல் பார்வை இருப்பது போல் தோன்றுகிறது என்பது வேறு விஷயமாகும். ஆனால், இவரது இப்படிப்பட்ட

செயல்களிலிருந்தும் எண்ணங்களிலிருந்தும் தங்களை விலக்கிக் கொள்கின்ற பல நல்ல மனிதர்கள் நிச்சயமாக இந்த நாட்டில் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்களை தேடி கண்டுபிடித்து அவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எட்ட வையுங்கள்.

உலகில் அமைதி, அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டக் கூடியவர்களைத் தேடுங்கள். பிறகு உலகில் குழப்பத்தை ஏற்படுத்துபவர்கள் தொடர்பாக அவர்களுக்கு கவனமூட்டுங்கள். மற்றவர்களது உணர்வுகளை மதித்து நடக்கக் கூடியவர்கள், மற்றவரது மார்க்கத்திற்கு மதிப்பளிக்கக்கூடியவர்கள் ஆகியோரை ஒன்றுசேர்த்து உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கான பணிகளைச் செய்யுங்கள். ஒருவர் மற்றவரை மதித்து நடக்க வேண்டும் என்ற விஷயம் தொடர்பாக எல்லாரையும் விட அதிகமாக இஸ்லாம் தான் போதிக்கின்றது என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுங்கள்.

எதுவரையென்றால், இறைவனது பார்வையில் மிகப்பெரும் பாவமாக இருக்கின்ற இறைவனுக்கு இணை வைக்கின்ற செயலை செய்பவர்களைக் கூட கருத்தில் கொண்டவாறு இவர்களது சிலைகளை நீங்கள் ஏசாதீர்கள். அதற்குப் பதில் கூறும் முகமாக அவர்கள் அல்லாஹ்வை ஏசலாம் என்ற போதனையை இஸ்லாம் வழங்கியுள்ளது. இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் நாட்டில் குழப்பம் பரவிவிடும். இன்று ஹாலந்தில் உள்ள அஹ்மதிகள் தங்கள் முயற்சிகளை முன்னரை விட அதிகமாக செய்ய வேண்டியதுள்ளது. நான் நீண்ட காலம் கவனமூட்டி வருகின்றேன். இன்று உங்களது பொறுப்பு தொடர்பாக நீங்கள் சரியாக உணர்ந்திருந்தால் அல்மேரா என்ற இடத்தில் எங்கு நீங்கள் பள்ளிவாசலைக் கட்ட வேண்டும் என்று விரும்பியிருந்தீர்களோ அங்கு பள்ளிவாசலுக்கான இடத்தை அரசாங்கம் உங்களுக்கு தந்து விட்டு பிறகு அதை திரும்ப பெற்றிருக்காது. இது இஸ்லாத்தின் பகைவர்கள் உள்ள பகுதியாகும் என்பது சரிதான். ஆனால் இவ்வாறிருந்தும் கூட இந்த நகரில் பல நல்லவர்களும் இருக்கின்றார்கள். எனவே முன்பை விட அதிகமாக உங்களது முயற்சிகளை வலுவானதாக ஆக்குவதுடன் அதில் வேகம் இருக்க வேண்டும். அவ்வாறே நமது எந்தப் பணியும் துஆ இல்லாமல் நடக்காது என்பதையும் எப்போதும் நினைவில் வையுங்கள். இறைவனுடன் ஒரு குறிப்பான தொடர்பை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். துஆக்களின் பக்கம் அதிகம் கவனமூட்டுங்கள். இங்கு இதையும் நான் கூறுவேன். இந்த நாட்டின் ராணிக்காகவும் துஆ செய்யுங்கள். ராணி முஸ்லிம்களுக்கு எதிராக செய்யப்படும் எல்லா விதமான அநியாயமான செயல்களையும் தடுக்கின்றார்கள். அதற்கு எதிராக உள்ளார்கள் என்பதற்காகவே ஒரு பிரிவினர் இதை எதிர்த்தவாறு ராணியை பின்தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்கள். ராணி முஸ்லிம்களையும் தனது நகரத்து குடிமக்களாகக் கருதியவாறு அவர்களது உரிமைகளையும் உணர்வுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். நன்மைகளுக்குரிய நற்கூலியை நன்மை மூலமாக கொடுக்க வேண்டும் என்பதே முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டளையாகும்.

எனவே ராணிக்கு எதிரான ஒவ்வொரு சூழ்ச்சியும் தோல்வி அடைவதற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவரது நெஞ்சத்தையும் திறக்க வேண்டும். அவ்வாறே இந்த நாட்டு மக்களின் நெஞ்சத்தையும் அவன் திறப்பானாக. அதன் மூலம் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை புரியக்கூடியவர்களாக அவர்கள் ஆக வேண்டும். நாம் நீதியை நிலைநாட்டுவதற்காகவும் இஸ்லாத்தை உயர்த்துவதற்காகவும் நமது பங்கை முழுமையாக செலுத்த வேண்டும். ஏனென்றால், இஸ்லாத்தின் உயர்வையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் தகுதியையும் உலகம் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய இருக்கின்ற அந்த அல்லாஹ்வின் பயில்வானை ஏற்றுக் கொண்டவர்களாக நாம் இருக்கின்றோம். உலகை இஸ்லாத்தின் காலடியில் கொண்டு வர வேண்டியதுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் இந்திய துணைக்கண்டத்தில் பொய்யின் கர்ஜனையைத் தடுத்து நிறுத்தினார்கள். இந்திய துணைக்கண்டத்திலுள்ள முஸ்லிம்கள் இதை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் முஸ்லிம்கள் ஷிர்க்கின் மடியில் விழுவதிலிருந்தும் தடுத்தார்கள் என்பதுதான் உண்மை.

அவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காக தனது அனைத்தையும் தியாகம் செய்தவர்கள் ஆவார்கள். பிறகு ஆப்பிரிக்காவில் நமது முபல்லிக்குகள் இஸ்லாத்தை தப்லீக் செய்து திரித்துவத்தை ஏற்றுக் கொண்ட மக்களை ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ள வைத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதக்கூடியவர்களாக அவர்களை ஆக்கினார்கள். மாநாடுகளில் ஆப்பிரிக்க அஹ்மதிகள் தங்களது அழகிய குரலில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ் என்று கூறுவதை நாம் கேட்டுள்ளோம். இவர்களில் பெரும்பாலார் கிறிஸ்தவத்திலிருந்துதான் இஸ்லாத்திற்கு வந்துள்ளனர். கானாவில் பெரும்பாலான மக்கள் கிறிஸ்தவத்திலிருந்துதான் இஸ்லாத்திற்கு வந்துள்ளனர். இந்தப் பணியைத் தான் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடமிருந்து கற்று அதை உலகில் செய்து கொண்டிருக்கின்றது. இன்று உங்களை விட்டுப் பிரிந்து உலகத்திற்கு முன்னால் இஸ்லாத்தின் உண்மையான உருவத்தை எவரும் எடுத்து வைக்க முடியாது. ஏனென்றால், உலகத்திற்கு நேர்வழியைக் காட்ட தோன்றிய அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள மஹ்தியாக அவர்கள்தான் இருக்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்விடமிருந்து நேர்வழியைக் கொண்டு வந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக இருக்கின்றார்கள். அவர்கள் தமது வாழ்நாளின் ஒவ்வொரு நொடியையும் முஹம்மதிய்யத்தின் உயர் தகுதியை பிறர் ஏற்றுக் கொள்ளும்படி செய்வதற்காகவே அர்ப்பணித்தவர்களாவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் மீது இருந்த பேரன்பை அவர்களது எழுத்துக்களிலிருந்து நாம் புரிந்து கொள்ள முடியும்.

**அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இப்போது வானத்தின் கீழ் ஒரு வேதம் மட்டுமே ஒரு நபி மட்டுமே இருக்கின்றார். அதாவது ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள்தான். அவர் எல்லா நபிமார்களை விடவும் உயர்ந்தவரும் சிறந்தவருமாவார். எல்லா தூதர்களை விடவும் முழுமை பெற்றவரும் சிறப்பிற்குரியவருமாவார். அவர் காத்தமுல் அன்பியாவாகவும் மக்களில் சிறந்தவராகவும் இருக்கின்றார்கள். அவரைப் பின்பற்றுவதன் மூலம் இறைவன் கிடைக்கின்றான். மேலும் அதன் மூலம் இருள்களின் திரை அகன்று விடுகின்றது. இந்த உலகில் உண்மையான இரட்சிப்பிற்கான அடையாளங்கள் தெளிவாகத் தென்படுகின்றன.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:**

அந்த மனிதர் எல்லாரையும் விட முழுமை பெற்றவராகவும் முழுமை பெற்ற மனிதராகவும் இருந்தார். முழுமை பெற்ற நபியாகவும் இருந்தார். அவர் முழுமையான பரக்கத்துகளுடன் வந்தார். அவர்கள் மூலமாக ஆன்மீக எழுப்புதலும் ஒன்றுகூடுதலும் ஏற்பட்டதால் உலகின் முதல் கியாமத் தோன்றியது. மரணித்துப்போன உலகம் அவர்களது வருகையால் உயிர் பெற்றது. அந்த அருளுக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா தூயவர்களின் தலைவராகவும் தூதர்களில் சிறந்தவராகவும் நபிமார்களின் பெருமையாகவும் திகழ்ந்த ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

எங்கள் அன்பான இறைவா! இந்த அன்பான நபியின் மீது உலகம் தோன்றிய நாள் முதல் எவர் மீதும் நீ இறக்காத அந்த கருணையையும் அருளையும் இவர்கள் மீது நீ இறக்குவாயாக.

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்த மக்கள் தங்களுக்கு உரிமையில்லாத நிலையில் இறைவனுக்கு அஞ்சாமல் நமது கண்ணியமிக்க நபி ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களை தீய சொற்களால் நினைவு கூறுகின்றார்களோ மேலும் அவர்கள் மீது அசுத்தமான குற்றங்களை சுமத்துகின்றார்களோ, மேலும் அன்னாரைக் குறித்து தீய சொற்களை கூறுவதிலிருந்தும் விலகாமல் இருக்கின்றார்களோ அவர்களுடன் நாம் எவ்வாறு சமாதானம் செய்து கொள்ள முடியும்?

நான் உண்மையாகவே கூறுகின்றேன். எங்களால் புற்றுகளிலுள்ள பாம்புகளுடனும் காடுகளிலுள்ள ஓநாய்களுடன் சமாதானம் செய்து கொள்ள முடியும். ஆனால் நமது உயிரை விடவும் நமது தாய் தந்தையரை விடவும் அதிகமாக நமது நேசத்திற்குரிய நபியின் மீது தீய தாக்குதல்களைத் தொடுக்கின்ற இந்த மக்களுடன் நாம் சமாதானம் செய்து கொள்ள முடியாது. இறைவன் நம்மை இஸ்லாத்தில் மரணிக்கும்படி செய்வானாக. நமது ஈமானில் பறிபோகக்கூடிய செயலை செய்ய நாம் விரும்பவில்லை.

இவ்வாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தன்மான உணர்வை வெளிப்படுத்தி பேரன்பை வெளிப்படுத்தி முஹம்மதிய்யத்தின் உயர் தகுதியை வெளிப்படுத்திக் காட்டக் கூடியவர் யாராவது இருக்கின்றாரா? இன்றைய காலத்தில் அப்படிப்பட்ட எவராவது நமக்கு தெரிகின்றாரா? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத் தவிர வேறு எவரும் நமக்கு தென்படமாட்டார்கள். உலகம் முழுவதும் தேடிப் பாருங்கள். அப்படிப்பட்ட உண்மைப் பேரன்பர் உலகம் முழுவதும் தேடினாலும் உங்களுக்கு கிடைக்கமாட்டார். ஆனால் முஸ்லிம்களில் ஒரு பெரும் பிரிவினரின் துர்பாக்கிய நிலை என்னவென்றால் அவர்கள் இந்த ரஸூலின் பேரன்பரை மறுக்கின்றார்கள். அநியாயமான முறையில் வீண் பேச்சுக்களுக்கும் ஏச்சுப் பேச்சுகளுக்கும் அவரை இலக்காக ஆக்குகின்றார்கள்.

பாகிஸ்தானில் நாள்தோறும் முல்லாக்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள். 98% அஹ்மதிகள் வாழ்கின்ற ரப்வாவில் அஹ்மதிகளுக்கு மாநாடுகளையும் இஜ்திமாக்களையும் நடத்துவதற்கான அனுமதி இல்லை. ஆனால் கத்மே நுபுவ்வத்தின் பெயரில் அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு அஹ்மதிய்யத்திற்கு எதிராகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராகவும் அசுத்தமான சொற்களைக் கூறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. நேற்று மாலையில் இருந்து அக்டோபர் மாதத்தில் இவர்கள் நடத்துகின்ற ஒரு மாநாடு நடந்து வருகின்றது. இன்று மாலை அது முடிவடையும். அதில் இதுவரை கிடைத்த அறிக்கையின்படி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது அன்பை வெளிப்படுத்துகின்ற விஷயங்கள் குறைவாகவே பேசப்படுகிறது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக அசுத்தமான கீழ்த்தரமான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றது. கத்மே நுபுவ்வத் என்ற பெயரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை தங்களது இலக்காக அவர்கள் ஆக்கியுள்ளனர். அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் உள்ளங்களை வெகுவாக காயப்படுத்தியுள்ளனர். ஆனால் நாங்கள் இந்த அனைத்து செயல்களையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பேரன்பின் காரணமாக சகித்துக் கொள்கின்றோம். எங்களது அன்பான இறைவன் முன்னால் நாங்கள் குனிகின்றோம். அவன் ஒருபோதும் எங்களை கைவிட்டதில்லை. எங்கள் தரப்பிலிருந்தும் இஸ்லாத்தை தப்லீக் செய்வதிலுள்ள முயற்சிகள் குறைவாக இருந்தாலும் அல்லாஹ் தனது அன்பான மஹ்தி மஸீஹின் உண்மையை நிரூபிப்பதற்காக தாமாகவே வழிகாட்டுகின்றான். கடந்த 125 வருடங்களாக இவ்வாறு வழிகாட்டிக் கொண்டே செல்கின்றான். அவர்களது உள்ளங்களை திறக்கின்றான். அப்படிப்பட்டவர்கள் ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பை வழங்கிக் கொண்டே செல்கின்றான். இப்போது சில சம்பவங்களை நான் உங்கள் முன்னால் வைப்பேன். உங்களது ஈமான் அதிகரிப்பதற்காக அவற்றை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

**ஜெர்மனியிலுள்ள நமது முபல்லிக்கான முஹம்மது அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஒரு அஹ்மதியல்லாத நண்பர் சர்பாத் பாஸ் சாஹிப் பல வருடங்களாக எனது தப்லீகின் கீழ் இருந்து வந்தார். அவர் ஜமாஅத்தின் கொள்கைகளை எல்லா வகையிலும் சரியானது என்று கருதி வந்தார். ஆனால் பைஅத் தொடர்பாக அவரது உள்ளத்திற்கு திருப்தியும் நிம்மதியும் கிடைக்கவில்லை. இவர் பிறருக்கு தப்லீகும் செய்து வந்தார். இவரது தப்லீகின் விளைவாக மற்ற சில மக்கள் பைஅத் செய்தனர். அவர் பைஅத் செய்யாமல் இருந்தாலும் அஹ்மதிய்யத் பற்றி தப்லீக் செய்து வந்தார். ஆனால் எனக்கு சில சலனங்கள் உள்ளன என்று கூறி வந்தார். ஒருநாள் அவர் என்னிடம் வந்தார். பைஅத் செய்வதற்கான வழிமுறை என்ன? என்று அவர் கேட்டார். நான் வியப்புடன் என்ன விஷயம்? என்று கேட்டேன். அதற்கு அவர் இரவில் நான் ஒரு கனவு பார்த்தேன். அதில் எனக்கு ஒரு குரல் வந்தது. அதில் அஹ்மதிய்யத் ஒரு கடலாகும். அதன் கருவூலங்கள்

பற்றி முழுமையாக அறிந்து கொள்வது எல்லாரது சக்திக்கும் உட்பட்டதல்ல என்று கூறப்பட்டது. இந்த குரல் எனது உள்ளம் மற்றும் ஆன்மாவின் நிலைமையை மாற்றி விட்டது என்று அவர் கூறினார். அதற்குப் பிறகு உடனடியாக அவர் பைஅத் செய்து விட்டார்.

**ஐவரிகோஸ்ட்டிலுள்ள ஒரு கிராமமான** சோகோபேயில் நமது முபல்லிக் தப்லீக் செய்வதற்காக சென்றார். இமாம் மஹ்தியின் வருகை பற்றி அவர் அறிவித்தார். அந்த கிராமத்தை தோற்றுவித்த யஹ்யா சுபாத்தே சாஹிப் எழுந்து நின்று தனது கனவைக் கூறினார்.

இரவில் வடக்குப் பக்கத்தின் இறுதி எல்லையிருந்த அடிவானத்தில் ஏறக்குறைய அதிகாலை 2 மணி அளவில் ஒரு ஒளி உதயமாவதை அவர் பார்த்தார். பிறகு ஒரு வாரம் கழிந்த பிறகு இன்னொரு ஒளி தெற்கு அடிவானத்தில் வெளிப்பட்டது. இந்த கிராமத்தின் Chief தனது கனவை கிராமத்திலுள்ள ஆலிம்களிடம் கூறினார். அதற்கு ஆலிம்கள் உமக்கு மிகப்பெரிய நற்பாக்கியம் கிடைக்கப் போகிறது என்று விளக்கம் கூறினார்கள். இந்த கனவை அவர் கண்டு சில நாட்கள் கழிந்ததும் நமது அஹ்மதி முபல்லிக்குகளின் குழு அந்தக் கிராமத்தை அடைந்து இமாம் மஹ்தி தோன்றிய செய்தியை அவருக்கு தெரிவித்ததும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தவாறு அவர் மக்களுக்கு முன்னால் வந்தார். முழு சம்பவத்தையும் கூறி வடக்கிலும் தெற்கிலும் ஒளியின் வடிவில் தோன்றிய இந்த நற்பாக்கியத்தைப் பற்றிதான் அல்லாஹ் எனக்கு தெரிவித்துள்ளான் என்று கூறினார். நானும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கிறேன். எவர்கள் உங்களில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ள விரும்புகின்றீர்களோ அவர்களுக்கு அஹ்மதிய்யத் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட நற்பாக்கியமாகும் என்ற உறுதியை நான் வழங்குகின்றேன். அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போது ஏறக்குறைய முழு கிராமத்து மக்களும் பைஅத் செய்தனர்.

**பிறகு ஈராக்கிலிருந்து ஒருவர் எழுதுகின்றார்:**

நான் ஷியாக்கள் இருக்கின்ற பகுதியில் வசிக்கின்றேன். எனது தந்தையாரும், தாத்தாவும் ஷியாக்கள் ஆவர். ஆனால், இமாம் மஹ்தி தொடர்பான ஷியாக்களின் கொள்கை எனக்கு திருப்திகரமாக இருக்கவில்லை. எங்கோ ஏதோ தவறு இருக்கிறது என்று எனக்கு தோன்றியது. ஒரு நாள் கனவில் நான் ஓர் அறையில் அமர்ந்திருப்பதைப் பார்த்தேன். அப்போது நான்கு நபர்கள் வருகின்ற சப்தம் கேட்டது. அவர்களை எனக்கு தெரியாது. வெளியில் வந்து பார்த்த போது இந்த நால்வரும் தண்ணீர் பைப்புகள் மூலம் எனது வீட்டின் மீது தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தனர். நீங்கள் என்ன செய்கின்றீர்கள என்று நான் அவர்களிடம் வியப்புடன் கேட்கின்றேன். எங்களுக்கு உங்களது வீட்டை சுத்தப்படுத்தும்படி கட்டளையிடப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினார்கள். நான் அவர்களிடம் மற்ற அண்டை வீட்டுக்காரர்கள் தொடர்பாக என்ன கட்டளையிடப்பட்டுள்ளது? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் உங்களது வீட்டை மட்டும் சுத்தப்படுத்த வேண்டும் என்றே எங்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினார்கள்.

கனவு கண்ட அடுத்த நாள் நான் தொலைக்காட்சியை திறந்ததும் திரையில் நான்கு நபர்கள் அதாவது முஸ்தஃபா ஸாபித் சாஹிப், ஷரீஃப் சாஹிப், ஹாமிது சாஹிப், மூஃமின் சாஹிப் ஆகிய நால்வரும் அல்ஹிவாருல் முபாஸிர் என்ற நிகழ்ச்சியில் இருந்தனர். இந்த கனவு அல்லாஹ்விடமிருந்து காட்டப்பட்டுள்ளது என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. எனவே நான் பைஅத் செய்து விட வேண்டும் என்று நான் முடிவெடுத்தேன் என்று அவர் எழுதியுள்ளார்.

**பிரான்ஸின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

அயர்லாந்து மண்டலத்தைச் சார்ந்த ஒரு பெண் பிரான்ஸில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள வந்தார். அவர் வருவதற்கு முன் அவருக்கு கனவில் பிரான்ஸ் சென்று உனது சகோதரியான ஆல்லனை கண்டிப்பாக சந்திக்க வேண்டும் என்று அவரிடம் கூறப்பட்டது. அந்தப் பெண் பிரான்ஸ் சென்று தனது இந்த தோழியை சந்தித்தார். அவர் அல்லாஹ்வின் அருளால் ஏற்கனவே பைஅத் செய்திருந்தார். அவர்கள் இந்தப் பெண்ணை மிஷன் ஹவுஸிற்கு கொண்டு வந்தார்கள். தப்லீக் கூட்டத்திற்குப் பிறகு இந்தப்

பெண் பைஅத் செய்து விட்டார். அடுத்த நாள் இந்த பெண்ணை ஏர்போர்ட்டில் கொண்டு விடுவதற்காக இவர் அவர் தங்கியிருந்த இடத்திற்கு சென்ற சமயத்தில் அங்கு அவரது கணவரும் மகனும் இருந்தனர். அவர்கள் எங்களுக்கு அஹ்மதிய்யத் பற்றி தெரிந்து விட்டது. நீங்கள் எங்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறினர். இவ்வாறு முழு குடும்பமும் அஹ்மதிகளாகி விட்டனர்.

**எகிப்திலிருந்தும் அப்துல் மஜீது சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நான் கனவில் ஒரு சிறு கப்பலில் பயணம் செய்வதைப் பார்த்தேன். கையில் ஒரு தடி இருந்தது. இலக்கு தெரியாமலும் எவ்வித நோக்கமுமில்லாமலும் நான் திரிந்து கொண்டிருக்கினறேன். அப்போது கடலில் புயல் வந்தது. கப்பல் கவிழும் நிலை ஏற்பட்டது. அப்போது நான் அல்லாஹ்விடமிருந்து இந்த மூஸாவின் தடியை வாங்கிக் கடலில் அடிப்பாயாக என்ற அவனது குரலைக் கேட்டேன். அப்போது ஓரளவு கோணலாக இருந்த எனது அந்த தடி எனது கையில் கிடைத்தது. நான் அந்த தடியை வானத்திலிருந்து பெற்று அதை கடலில் அடித்தேன். அப்போது கப்பல் ஒரு உயர்வான இடத்தை அடைந்து அங்கு நின்று விட்டது. அது அழகான கட்டிடங்கள் கொண்ட ஒரு நகரமாக இருந்தது. அதிலிருந்த எல்லா மக்களும் அழகிய வடிவத்தில் இருந்தனர். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நகரமாகும் என்று எனக்கு கூறப்பட்டது. நான் பைஅத் செய்ய வேண்டும் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது என்பதை நான் புரிந்து கொண்டேன். இதனால் எனக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது என்று எழுதியுள்ளார்.

**இது 2000 ஆம் வருடத்தில் நடைபெற்ற சம்பவம். ஜெர்மனியிலிருந்து ஒருவர் எழுதுகின்றார்:**

தப்லீக் ஸ்டாலில் வைத்து துருக்கியைச் சேர்ந்த ஒரு குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டது. பிறகு கணவன், மனைவி இருவரும் எங்கள் பள்ளிவாசலுக்கு வந்தனர். இந்த துருக்கிய பெண் நமது முபல்லிக்கின் மனைவியைப் பார்த்ததும் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வர ஆரம்பித்தது. அவர் கூறினார். சில நாட்களுக்கு முன்னர் நான் கனவில் நீங்கள் எனக்கு தப்லீக் செய்வதைப் பார்த்தேன். இதற்கு பிறகு அவருக்கு அஹ்மதிய்யத் தொடர்பான தகவல்கள் கூறப்பட்டன. M.T.A.-வில் அவர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களையும் பார்த்திருந்தார். சில நாட்களுக்குப் பிறகு அவர் மீண்டும் பள்ளிவாசலுக்கு வந்தார். பிறகு கூறினார். வீட்டிற்குச் சென்ற பிறகு நான் எனக்குரிய பாணியில் துஆ செய்தேன். இறைவா! எனக்கு இது ஒரு புதிராக ஆகி விட்டது. நீ எனக்கு உதவி செய்வாயாக. பள்ளிவாசலில் வைத்து டி.வி.யில் நான் கண்ட நபர் உண்மையாளர் என்றால் அவரை நான் சந்திக்கும்படி செய்வாயாக என்று துஆ செய்ததாக அவர் கூறுகின்றார். பிறகு கஷ்ஃப் காட்சியில் அவர் என்னைச் சந்தித்தார் என்று அவரே கூறுகின்றார். இந்தக் கனவின் விளைவாக இந்தக் குடும்பத்தைச் சார்ந்த 3 நபர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் அல்லாஹ் வழிகாட்டுகின்றான்.

**ஹாலந்தின் உங்களது முபல்லிக் சாஹிப் அவர்கள் எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார்:**

மாலத்தி என்ற இந்துப் பெண் 15 வருடங்களுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மொரோக்கோவில் வசித்து வந்த யூசுப் மன்சூருல்லா என்பவரை இவர் திருமணம் செய்தார். திருமணத்திற்குப் பிறகு இவர் கனவில் இந்தியாவைச் சார்ந்த பல்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள் வெண்ணிற ஆடையை அணிந்தவர்களாக ஒரு பெரியவருக்கு அருகில் ஒன்றுசேர்வதை இவர் பார்த்தார். அந்த மக்கள் கைகளால் சைகை செய்தவாறு இந்த நபர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார் என்று கூறுகின்றனர். அந்தப் பெண் தனது கணவருக்கு இந்தக் கனவைக் கூறினார். கணவர் M.T.A.வைப் பார்த்தார். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தோற்றம் தொடர்பாக பேச்சு நடந்து கொண்டிருந்தது. தனது மனைவியை அழைத்து யூசுப் மன்சூருல்லா சாஹிப் டி.வி.யில் வந்த நிகழ்ச்சியைக் காட்டியதும் அவர் அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்ததும் உடனடியாக அவர்களை அடையாளம் கண்டு கொண்டு இந்த பெரியவரைத்தான் நான் கனவில் பார்த்தேன் என்று கூறினார். இவர்கள் இருவரும் M.T.A.பார்த்தனர்.

இறுதியில் பைஅத் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தனர். அல்லாஹ் இவர்களை அஹ்மதிய்யத்தில் நிலைத்திருக்கச் செய்வானாக.

இவ்வாறு ஜமாஅத்தில் இணைபவர்களுடன் தொடர்பு வைப்பது ஜமாஅத்தின் பணியாகும். அப்படிப்பட்ட மக்களுடன் நிரந்தரமான தொடர்பு இருக்க வேண்டும். அதன் மூலமாக உங்களுக்கு அருகாமையில் அவர்களை கொண்டு வர வேண்டும்.

பிறகு கிறிஸ்தவர்களின் சம்பவங்களும் உள்ளன.

**கனடாவின் அமீர் சாஹிப் கிரான்டி வில்சன் என்ற பெண் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

டொரோன்டாவில் வசித்து வரும் இந்த இளம்பெண் நம்முடைய ஒரு தாயி இலல்லாஹ் ஹஸன் பாரூக் சாஹிபின் தப்லீகின் கீழ் இருந்து வந்தார்.

இவர் ஒன்றன்பின் ஒன்றாக அல்லாஹ்வையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), ஹஸ்ரத் ஈஸா (அலை) ஆகியோரையும் கனவில் பார்த்தார். அவர்கள் இவருக்கு ஆறுதல் கூறியவாறு இஸ்லாத்தில் வரும்படி அழைப்பு விடுத்தார்கள். அதற்குப் பிறகு அவர் பைஅத் செய்து விட்டார்.

**பிறகு கனடாவைச் சேர்ந்த இம்மானுவேல் ரூவெட்செச் என்பவர் பைஅத் செய்த சம்பவம்:**

என்டோரியாவில் வசித்து வரும் 24 வயது வெள்ளையரான இந்த இளைஞர் சிறு வயதிலிருந்தே கனவில் ஒளியைக் கண்டு வந்தார். ஆரம்பத்தில் இது மங்கலாக தெரிந்தது. பிறகு நாட்கள் செல்லச் செல்ல இந்த ஒளி மேலும் பிரகாசமடைந்து கொண்டே சென்றது. ஒன்றரை வருடத்திற்கு முன்பு இந்த இளைஞர் முஸ்லிம் ஆனபோது இந்த ஒளி மேலும் தெளிவாகத் தெரிந்தது. அஹ்மதிய்யத் தொடர்பாக இவர் ஆராய்ந்து வந்த சமயத்தில் இந்த ஒளி மேலும் பிரகாசமடைந்து கொண்டே சென்றது. எதுவரையென்றால் அந்த ஒளியில் அவருக்கு ஒரு முகத்தின் மங்கலான சாயல் தெரிய ஆரம்பித்தது. ஒருநாள் ஒரு அஹ்மதி நண்பருடன் 3 அல்லது 4 மணி நேரம் பேசிய பிறகு இரவில் கனவில் ஒரு தெளிவான முகம் தெரிந்தது. உடனடியாக அவர் தனது அஹ்மதி நண்பருக்கு இதுபற்றி தெரிவித்தார். அவருக்கு கலீஃபாக்களின் படங்கள் காட்டப்பட்டன. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் படமும் காட்டப்பட்டது. அதற்குப் பிறகு எனது படம் காட்டப்பட்ட போது, இதுதான் நான் கனவில் கண்ட அந்த முகம் என்று அவர் கூறினார். 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இவர் பைஅத் செய்தார்.

**உகாண்டாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்:**

தப்லீகின் கீழ் எங்களது குழு ஒரு வீட்டிற்கு தூதுச் செய்தியை வழங்கச் சென்ற போது வீட்டிலிருந்த நபர் ஒரு கிறிஸ்தவராக இருந்தார். அவர் நமது குழுவினரைப் பார்த்து எந்த மக்களுக்காக நான் காத்துக் கொண்டிருந்தேனோ அது நீங்கள்தான். ஏனென்றால், இன்று இரவு நான் கனவில் சில முஸ்லிம்கள், பல்வேறு பிரிவுகள், கோத்திரங்கள் ஆகியவற்றைச் சார்ந்த மக்களை ஒன்றுசேர்ப்பதைப் பார்த்தேன். ஒரே இறைவன் மற்றும் மஸீஹின் இரண்டாவது வருகை தொடர்பாக எடுத்துக் கூறுவதற்காகவே அவர்கள் மக்களை ஒன்றுசேர்க்கின்றார்கள். நீங்கள் எனது கனவை உண்மையாக மாற்றி விட்டீர்கள். என்னிடம் பைஅத் வாங்குங்கள் என்று அவர் கூறினார். இதைக் கேட்ட நமது குழுவைச் சேர்ந்தவர்கள் நீங்கள் பைஅத் பாரத்தை படித்துப் பார்த்து திருப்தி அடைந்து கொள்ளுங்கள் என்று கூறியதைக் கேட்ட அவர், நான்தான் ஏற்கனவே ஈமான் கொண்டு விட்டேனே என்று அந்த கிறிஸ்தவர் கூறினார். எனது தாமதத்திற்கான காரணங்களை உருவாக்காதீர்கள் என்று கூறினார். அதே சமயத்தில் அவர் தனது குடும்பத்தினருடன் பைஅத் செய்து விட்டார்.

**சிராலியோனின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்:**

ஹஸன் குமாரா சாஹிப் என்பவர் தாய்மொழி மற்றும் ஓவியத்தின் ஆசிரியராக இருக்கின்றார். இவர் 2006 ஆம் ஆண்டில் கனவில் வானத்தில் மிகவும் அழகிய கையெழுத்தில் பிரகாசமான சொற்களில் Allah is Greatest என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தார். அப்போது அவர் கிறிஸ்தவராக இருந்ததால் ஏக இறைவனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இறைவனின் நபியான ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் எப்படி இறைவனாக முடியும்? என்ற கேள்வியும் உள்ளத்தில் எழுந்தது. இந்த எழுத்துக்களைப் பார்த்ததும் அச்சத்தால் அவரது உடல் நடுங்க ஆரம்பித்தது என்று அவர் கூறுகின்றார். அச்சத்தால் விழித்தெழுந்தார்.

2008 ஆம் ஆண்டு இதைப்போன்ற இன்னொரு கனவை இவர் பார்த்தார். வானத்தில் பிரகாசத்தின் ஒரு மிகப்பெரும் வட்டம் தோன்றியது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது உடைந்தது. அதற்குள்ளிலிருந்து Allah is Greatest என்ற இதே சொற்கள் வெளியே வந்து வானத்தில் பரவி விட்டது. பிறகு 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பாகிஸ்தானிலிருந்து வெளியான Khilafat Jubilee Souvenir இவர் வாங்கினார். அதைப் படிக்க ஆரம்பித்தார். மெதுமெதுவாக இறைவனின் அருளால் இவர் அஹ்மதிய்யத்தின் பக்கம் குனிய ஆரம்பித்தார். இந்த Souvenir -ஐப் படித்ததன் மூலமாக பல்வேறு கேள்விகளுக்கான விடை அவருக்கு கிடைத்தது.

2009 ஆம் ஆண்டு இவர் மீண்டும் ஒரு கனவு பார்த்தார். உளூ செய்து தயாரான பிறகு தொழுகைக்காக இவர் அஹ்மதிய்யா பள்ளிவாசலுக்குச் செல்கிறார். அவர் அங்கு சென்ற சமயத்தில் ஜமாஅத்தான தொழுகை முடிந்து விட்டது. அப்போது அவருக்கு ஜமாஅத்தான தொழுகை கிடைக்காமல் போனதற்காக மிகுந்த துயரம் ஏற்பட்டது என்று அவர் கூறுகின்றார். இதற்குப் பிறகு இவரது கண்கள் திறந்து விட்டன.

2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜமாஅத்தின் முபல்லிக் இவரை தனது வீட்டிற்கு அழைத்தார். ஏன் பைஅத் செய்யாமல் இருக்கின்றீர்கள்? என்று கேட்டார். சில கேள்விகள் இப்போதும் எஞ்சியிருக்கின்றன என்று கூறினார். அதற்கான பதில்கள் கிடைத்து விட்டால் பைஅத் செய்வேன் என்று கூறினார்.

இந்த வருடம் ஜெர்மனியில் 2011-ல் தனது கேள்விக்கான பதில்களைப் பெற்று இவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார். அல்ஹம்துலில்லாஹ். இவர் மிகுந்த ஆர்வத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களைப் படித்து வருகின்றார்.

**நமது Exibition -ல் கலந்து கொண்ட ரேடியோ நிருபர் ஆன திரு. ஜீல் தனம்பூ அவர்கள் கூறுகின்றார்கள்:**

இன்று முதன்முறையாக நான் இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் புரிந்து கொண்டேன். இன்றுதான் நான் இஸ்லாத்தைப் பற்றி அறிந்தேன். இன்றுதான் இஸ்லாத்தை ஒரு மதமாக ஏற்றுக் கொண்டேன். நான் இஸ்லாத்தை மிகவும் தீயதாகக் கருதி வந்தேன். இன்று முதன்முறையாக நான் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியைப் புரிந்து கொண்டேன்.

**பிறகு ஒரு விருந்தாளியான போஸ்டன் எம்பிரியாரே அவர்கள் கூறுகின்றார்:**

பள்ளிவாசல் மந்திர வித்தைகள் நிறைந்த இடம் என்று நான் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், அஹ்மதிய்யா பள்ளிவாசலில் நுழைந்த பிறகுதான் இந்த இடம் மிகவும் அமைதி நிரம்பியதாக இருக்கின்றது என்று தெரிய வருகிறது என்று கூறினார்.

அல்லாஹ் தனது வல்லமையின் காட்சியைக் காட்டியவாறு தாமாகவே நல்லியல்பு கொண்ட மக்களுக்கு உலகில் ஒவ்வொரு இடத்திலும் வழிகாட்டுகின்றபோது, அவர்களை சூழ்ந்து கொண்டு அவர்களை ஜமாஅத்தில் இணைக்கின்றபோது அதனால் அவர்கள் முஹம்மதிய மஸீஹை அடையாளம் கண்டவாறு அவருடன் ஒரு வலிமையான தொடர்பை ஏற்படுத்திக்கொள்கின்றனர். அவ்வாறிருக்கும்போது நாம் இந்த

அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஏற்படுத்துகின்ற தடைகள், எதிர்ப்புகள், ஏச்சுப் பேச்சுக்கள் ஆகியவற்றைக் கேட்டு கவலை அடைய வேண்டிய தேவை இல்லை. அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அல்லது இஸ்லாத்தின் எதிரிகள் நமது அன்பான எஜமானரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு எதிராக தரக்குறைவான சொற்களை பயன்படுத்துகின்றபோதும், அவர்களது உண்மைப் பேரன்பர் தொடர்பாக இழிவாகப் பேசுகின்றபோதும் நமது உள்ளங்கள் நிச்சயமாக காயமடைகின்றன. அதற்கு ஒரேயொரு சிகிச்சைதான் இருக்கின்றது. துஆ செய்வதற்காக அல்லாஹ்வின் முன்பாக குனிந்து விடுங்கள். அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். உங்களது செயலாலும் அறிவாலும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் அழகான போதனைகளை உலகின் முன்னால் எடுத்துக் கூறுங்கள். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! அஹ்மதிகளுக்கு ஐரோப்பாவில் இஸ்லாத்தின் எதிரிகள், அஹ்மதிய்யத்தின் எதிரிகள் ஆகிய இரு சாராரையும் எதிர்கொள்ள வேண்டியதுள்ளது. முஸ்லிம்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் புறமிருந்தும் எதிர்ப்பு இருக்கின்றது. ஏனென்றால், இன்றைய நாட்களில் மவ்லவிகள் அவர்களது மூளையை விஷத்தால் நிரப்பி விட்டார்கள். இஸ்லாத்தை எதிர்க்கும் சக்திகளும் ஏற்கனவே இருந்து வருகின்றன. நமது முன்னேற்றம், நமது பள்ளிவாசல்கள் இரண்டுமே இவர்களுக்கு முற்களாய் குத்துகின்றன. இன்ஷா அல்லாஹ் பெல்ஜியத்திலும் அங்கு கட்டப்பட்டுள்ள முதல் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்ட வேண்டியதிருக்கின்றது. அங்கு இந்த இரண்டு சாரார் தரப்பிலிருந்தும் ஜமாஅத்திற்கு எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டியது உள்ளது. எதிரிகளின் ஒவ்வொரு சூழ்ச்சியையும், ஒவ்வொரு தீங்கையும் அல்லாஹ் அவர்கள் பக்கமே திருப்புவதற்காக துஆ செய்யுங்கள். இந்த அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சி நல்ல முறையில் நடப்பதற்காக துஆ செய்யுங்கள். பள்ளிவாசலும் விரைவாக கட்டப்பட்டு முழுமையடைந்து முன்பை விட அதிகமாக இஸ்லாத்தின் அழகிய போதனைகளை நாம் உலகிற்கு எடுத்துக் கூறுபவர்களாக ஆவோமாக! அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT NUNSFEET, HOLLAND**

**ON 14.10.2011**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456